**கொழும்பு தலைநகரின் நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2014**

கொழும்பு தலைநகரின் நகர அபிவருத்திச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 8145-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II (பீ.3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகாரசபை , இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகர சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகும். கொழும்பு நீரேந்து பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், தெரிவுசெய்யப்பட்ட முன்மாதிரி முதலீடுகளினூடாக உள்ளூர் உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் புனரமைத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் என்பவற்றிற்காக கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் இயலுமையினை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் யூ.எஸ்.டொலர் 321 மில்லியனுக்கு சமமான ரூபா 42,031.74 மில்லியனானதுடன் இதில் யூ.எஸ்.டொலர் 213 மில்லியன் அல்லது 66.35 சதவீதம் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகஉள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான

பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் ˙கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

------------------------

**2.1. அபிப்பிராயம்**

-----------------

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றனஎன்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டில் மற்றும் 2014 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளி விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | கடன் உடன்படிக்கையின் படி நிதியளிப் பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐபீஆர்டி | 213 | 27,890.22 | 8,244.00 | 26.97 | 3,531.70 | 46.15 | 6,042.66 |
| ஜிஓஎஸ்எல் | 108 | 14,141.52 | 756.00 | 5.77 | 755.96 | 9.43 | 1,234.18 |
| மொத்தம் | 321 | 42,031.74 | 9,000.00 | 32.74 | 4,287.66 | 55.58 | 7,276.84 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறிப்பிட்ட செயற்திட்ட காலத்தினுள் ஒதுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் செயற்திட்ட இலக்குகளை அடைவதற்காக முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவும் வகையில் மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காரணத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி மற்றும் பௌதிக ரீதியாக செயற்திட்டத்தால் அடையப்பட்ட உள்ளவாறான செயலாற்றலை உறுதிப்படுத்தக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மேலும், செயற்திட்ட காலத்தின் 30 மாதங்கள் அல்லது 50 சதவீதம் கடந்த பின்னர் கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த நிதியில் 17.31 சதவீதம் மாத்திரமே செயற்திட்டத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த திகதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றலை இனங்காணமுடியாதிருந்தது. இதற்கிணங்க செயற்திட்டத்தின் எஞ்சிய 30 மாதகாலப்பகுதியினுள் 82.69 சதவீதமான எஞ்சிய நிதியை பயன்படுத்துவது கணக்காய்வில் சந்தேகத்திற்கிடமாக உள்ளது. அது தொடர்பில் பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உபகூறுகளின் தொடர்பு | உபகூறு | மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா மில்லியன் |
|---|---|---|
| 1.3 | வெள்ளம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்திற்கான இயலளவை அதிகரித்தல் | 2,016.48 |
| 2.1 | கொலன்னாவை நகர சபையினை மேம்படுத்துவதற்கான உதவி | 316.87 |
| 2.2(அ) | பெரும்பாக அபிவிருத்தி தந்திரோபாய திட்டமிடல், மத்திய முகவராண்மைக்கான சாத்தியவள கற்கைகள் | 518.52 |
| 2.2(ஆ) | நிறுவன வலுப்படுத்தல் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களின் இயலளவை கட்டியெழுப்பல். | 216.05 |

(i)

செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து அனைத்து உபகூறுகளின் நடவடிக்கைகள் சுயாதீனமாக ஆரம்பிக்கக்கூடிய வகையில் இருந்த போதிலும் போதிலும் பின்வரும் உபகூறுகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதிகள் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும், பாரிய வெள்ளங்களை குறைப்பதற்காக முழுமையாக கவனம் செலுத்தப்பட்ட வெள்ள கழிவுநீர் முகாமைத்துவத்தின் கீழுள்ள முதலாம்தர மற்றும் இரண்டாம்தர வாய்க்கால்கள் மற்றும் ஏரிகளின் உபகூறுகளிற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளில் 6.4 சதவீதமான ரூபா 13,529 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் 03 பிரதான நடவடிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெள்ள கழிவுநீர் முகாமைத்துவக் கூறின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எஸ்.ரி.செபஸ்தியன் தெற்கு கால்வாயின் ஆற்றங்கரையை பாதுகாப்பதற்காக மற்றும் டீ.ஆர்.விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள மக்காக்கம் நுழைவு பூங்காவினை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றலானது முறையே 24 சதவீதம் மற்றும் 50 சதவீதமான இலக்கினை அடைய எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் முறையே 18.5 சதவீதம் மற்றும் 30 சதவீதம் என அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், கொழும்பு தலைநகரிலுள்ள உள்ளூர் அதிகார சபைகளிற்கான நகர அபிவிருத்தி உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் இயலளவை கட்டியெழுப்பலின் கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மட்டக்குளியில் காக்கைத்தீவிலுள்ள கடற்கரை பூங்காவை நிர்மாணம் செய்தல் மற்றும் பொது வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக செயலாற்றல்கள் முறையே 55 சதவீதம் மற்றும் 9 சதவீதமான இலக்கை அடைய எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதிலும், பௌதீக செயலாற்றல்கள் முறையே 27 சதவீதம் மற்றும் 3 சதவீதமாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, கிரஹரி வாய்க்காலின் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் ஜயவர்த்தனபுர கோட்டே நகர பிரதேசத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் பொதி-II இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போன்றன 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 5 சதவீதம் மற்றும் 3 சதவீதமான மந்தமான செயலாற்றலைக் காட்டியது.

### 3.3 <u>ஒப்பந்த நிர்வாகம்</u>

(அ) நகர மண்டப நாற்சதுரத்திலுள்ள முன்மாதிரி வலய அபிவிருத்தியின் பொதி – III இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மீது கணக்காய்வாளரால் செய்யப்பட்ட உடனடி செவ்வையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விகாரமாதேவி பூங்காவின் வலய இல.பீ1 இற்கான நடைபாதை பிரதேசங்களின நுழைவுப் பாதையின் மீது கொங்கிறீற் செய்வதற்கென தயாரிக்கப்பட்ட முன்று அளவிடைப்பத்திர விடயங்கள் நியாயமான முறையில் அளவிடைப்பத்திரங்களை தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள் காரணமாக முறையே 129 சதவீதம் 45 சதவீதம் மற்றும் 14 சதவீதத்தால் மிஞ்சியிருந்தது. மேலும், அத்தகைய முரண்களிற்கான கொடுப்பனவுகளானது உரிய தரப்பினர்களது அனுமதி இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நடைபாதை பிரதேசத்தின் ஒரு அமைவிடத்திலுள்ள 10 மீற்றர் நீளமான வெடிப்பு உள்ளடங்கலாக 15 இடங்களில் வெடிப்புகள் இருந்தமை கணக்காய்வு சோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 2,504,625 கிரயத்தில் விஹாரமாதேவி பூங்காவின் பி1 வலயத்தில் குளங்கள் நிர்மாணித்தலிற்கான இலத்திரனியல் மற்றும் குழாய்களை பொருத்துவதற்கான ஒப்பந்தமானது வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் பொருத்தப்பட்ட உருப்படிகள் செயற்திறனற்றவை எனவும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. எனினும் குறைபாடுகளை சீராக்குவதற்கோ அல்லது முதவாவது ஒப்பந்தக்காரரிடமிருந்து கிரயத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் முரண்பாட்டு கட்டளைகளின் கீழ் வேறொரு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,002,378 கிரயத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இலத்திரனியல் மற்றும் குழாயிடல் வேலைகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக செவ்வையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- வயரிங் (மின்கம்பியிடும்) வேலைகள் முறையாக செய்யப்படாதிருந்ததுடன் வெளித்தரப்பினர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

- ரூபா 190,300 பெறுமதியான 22 நீர் ஜெட்கள் மற்றும் ரூபா 518,700 பெறுமதியான 22 மின்குமிழ்கள் மீளமைக்கப்பட்டிருந்ததுடன் அகற்றப்பட்ட விடயங்கள் களஞ்சியங்களிற்கு கையளிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வெளிச்சமூட்டல் முறைமை பொருத்தலின் தரமானது அதன் மீது குறைந்த விவரக்குறிப்பு காணப்பட்டமையால் கணக்காய்வில் தீர்மானிக்க முடியாதிருந்தது. மேலும் வெளிச்சமூட்டல் முறையின் வோல்டேஜ், வலு, எல்ஈடி தரம், மேற்பரப்பு விட்டம் என்பன கணக்காய்வில் பரிசோதிக்க முடியாதிருந்தது.

(iii) மேலே குறிப்பிடப்பட்டவைக்கு மேலாக விகாரமகாதேவி பூங்காவின் பீ1 வலயத்தில் குளங்கள் நிர்மாணிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட வேலைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட கள பரிசோதனையின் போது பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. அத்தகைய சந்தர்ப்பங்களின் பொழிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- நுழைவுப்பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ள குளத்தில் நான்கு வெடிப்புக்கள்

- நடைபாதை முறையாக நிர்மாணிக்கப்படாமை

- நுழைவு பாதையின் இடது பக்கத்தில் அமைந்துள்ள குளத்தின் 03 இடங்களில் நீர் ஒழுக்குகள் மற்றும் குளச் சுவரில் துளைகள் அவதானிக்கப்பட்டன.

(iv) விகாரமகாதேவி பூங்காவின் வலயம் பீ4 இன் உல்லாசப் பிரயாண பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,475,000 கிரயமான நிர்மாண பணிகள் முறையான திட்டமொன்றில்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் தர உறுதியை கருத்திற் கொள்ளாமல் குறைந்த தரத்திலுள்ள பொருட்கள் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- விடய இலக்கம் X1 X2 மற்றும் X5 இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட உல்லாசப் பிரயாண குடிசையின் கூரைக்கு பயன்படுத்துவதற்கு 10 GI குழாய்கள் வேண்டப்பட்டிருந்த போதிலும் 50mm நீளமான 06 GI நீளமான குழாய்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும் 100mmX50X6 இரும்பு கோல்கள் பயன்படுத்த வேண்டப்பட்டிருந்த போதிலும் 100mmX50X3 இரும்பு கோல்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேசைகள் மற்றும் வாங்குகளிற்கு பயன்படுத்தப்பட்ட பலகைகள் விபரக்குறிப்பில் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கமைய இல்லாதிருந்தது. ஆகையால் பலம் மற்றும் நிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது. மேலும் பலகை விளிம்பிற்கு வர்ணங்கள் பூசப்பட்டிருக்கவில்லை.

- விடய இலக்கம் X3 மற்றும் X4 இன் கீழ் நிர்மாணம் செய்யப்பட்ட 06 குடிசைகளின் கூரைகளிற்கு பயன்படுத்துவதற்கு 48 GI குழாய்கள் வேண்டப்பட்டிருந்த போதிலும் 50mm நீளமான 96 GI குழாய்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- விடய இலக்கம் X3 பீஜ இன் கீழ் 550mmX550mm அளவிலான வாங்குகள் வேண்டப்பட்டிருந்த போதிலும் வாங்குகளின் அளவு 550mmX450mm ஆக இருந்தது. ஆகையால் வாங்குகளின் அளவானது குறித்துரைக்கப்பட்ட அளவினை விட சிறிதாகவிருந்தது.

- விடய இலக்கம் X4B இன் கீழ் வாங்கிற்கு 04 தாங்கிகள் பொருத்தப்பட வேண்டிய போதிலும் 03 பொருத்திகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

- X3 மற்றும் X4 இற்கு கீழ் தயாரிக்கப்பட்ட மேசைகள் மற்றும் வாங்குகளின் பொருத்தலிற்காக பயன்படுத்தப்பட்ட பசை தரம் குறைந்ததாக இருந்தது. இதன் விளைவால் பொருத்தும் புள்ளிகளிலுள்ள அரித்தலிற்கான பொருத்திகளின் நிலைத்திருக்கும் தன்மையை அது பாதித்திருந்தது.

- XI விடயத்தின் கீழ் மேலதிக வேலையாக மேற்கொள்ளப்பட்ட சிறிய புகையிரதத்தின் வழங்கல் மற்றும் ஸ்தாபித்தலுக்காக ரூபா 2,000,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 05 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. சிறிய புகையிரதத்தின் பகுதிகள் பூங்காவில் தரித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) விகாரமகாதேவி பூங்காவின் பிரதான நுழைவு பாதையில் இடது பக்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட நடைபாதைகள் நியமங்களுக்கு இணங்க நிர்மாணிக்கப்படவில்லை. பல இடங்களில் அஸ்பல்ற் அடுக்குகள் சேதமடைந்திருந்தன.

(இ) செயற்திட்டமானது பொது வசதிகளை முன்னேற்றுவதன் கீழ் பணிகளை மேற்கொள்வதற்காக 2013 ஒக்தோபர் 25 இல் தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 44,948,514 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தது.

(i) கழிவறையில் பொருத்தப்பட்ட கழிப்பிட உணர்கருவிகள் செயற்பாடற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) சவுண்டர்ஸ் பிரதேசத்திலுள்ள கழிவறையில் சுவர் வெடிப்புக்கள் காணப்பட்டதுடன் சில வெடிப்புக்கள் கூரை வரை பரவியிருந்தது. கழிவறையின் கதவுகள் முறையாக பொருத்தப்படாமையால் அந்த கதவுகளை மூட முடியாதிருந்தது. மேலும் மலசலகூட முறைமை முறையாக பொருத்தப்பட்டிராதுடன் செயலற்ற நபர்களிற்காக கழிவறை வீதிக்கு வழிந்தோடியது.

(iii) பிலிப் குணவர்த்தன மாவத்தையிலுள்ள கழிவறையில் உள்ளவாறான மர வேலைகளின் அளவு 1.5 மீற்றராக இருந்த போதிலும் 4.3 மீற்றர் அளவான மர வேலைகளிற்கு ரூபா 23,650 தொகை

செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால் ரூபா 15,400 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(iv) கொழும்பு பல்கலைக்கழக பயன்பாட்டிற்காக அனுமதிக்கப்பட்டிருந்த ரூபா 7,084,244 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிலிப் குணவர்த்தன மாவத்தையிலுள்ள கழிவறைகள் செயற்பாடற்றிருந்தது.

(v) செயற்திட்டமானது மியூசுவல் சுரங்கப்பாதையின் மீள் நிர்மாணத்திற்காக ரூபா 409,971,109 கிரயத்தில் ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தபோதிலும் அந்த சுரங்க பாதையானது மிகவும் பழமையாக இருந்ததுடன் மீள்நிர்மாண நோக்கத்திற்கு பொருத்தமற்றது எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், ஹவியன் சுவர் முறையாக நிர்மாணம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர மண்டப நாற்சதுக்கத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு செவ்வையின் பிரகாரம் என்னுடைய முன்னைய கணக்காய்வு அறிக்கையில் அறிக்கையிடப்பட்ட முறையே காணியை முறையாக மட்டப்படுத்தாமல் புற்தரையிடல் மற்றும் களைச்செடிகள் வளருதல் போன்ற குறைபாடுகள் சீரமைக்கப்பட்டிருக்காததுடன் மைதானம் குறைவாக பராமரிக்கப்பட்டமையால் நகர மண்டப நாற்சதுக்கத்தின் நிலைமையானது 2015 ஏப்ரல் 31 இல் உள்ளவாறு மேலும் பின்னடைந்திருந்தது.